Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 250

யாழ்ப்பாணம் ஐப்பசி 3 ஷஃபான் 29 புதன்கிழமை (20-10-71)

அல்கத்தீன் பைப்புகள்
S-LON P.V.C.
பைப்புகள்
கல்வனைஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில் கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட்வெயர்ஸ்
ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# வினாக்கொத்தை 70 வீத ஆசிரியர் நிரப்பி அனுப்பினர்?

யாழ்ப்பாணம், புதன்

வடமாநிலக் கல்வியதிபதியினால் கல்விப்பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (1970) வகுப்புக்களுக்குப் போதித்த வடபகுதி ஆசிரியர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வினாக்கொத்தை இதுவரை எழுபது சதவீத மாணவர்கள் நிரப்பி அனுப்பியிருப்பதாகக் கல்விப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வினாக்கொத்துக்கு வடபகுதி ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபை ஆட்சேபனை தெரிவித்திருந்ததுடன் இதன் தூதுக்குழுவொன்றும் கொழும்புக்குச் சென்று கல்வி மாஅதிபதியைப் பேட்டிகண்டு திரும்பியிருந்தது. இந்த வினாக்கொத்தை நிரப்பி அனுப்ப வேண்டாமென்றும் அந்தச் சபை ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

வினாக்கொத்தை நிரப்பி அனுப்பவேண்டிய கடைசித் திகதி இம்மாதம் இருபதாம் திகதியாகிய இன்றைய தினந்தான் என்றும் வடபகுதிக் கல்வியதிபதி அறிவித்திருக்கின்றார். வினாக்கொத்தை வடபகுதியிலுள்ள ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிலர் வரவேற்றிருக்கின்றனர். மற்றும் சிலர் இதுபற்றி இதுவரை அபிப்பிராயம் எதுவும் வெளியிடவில்லை, ஆசிரியர்கள் மத்தியில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கள ஆசிரியர்களை நியமிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமித்துத் தரும்படி கல்வி அமைச்சரைக் கோரும் தீர்மானம் வடமராட்சி சமூகசேவா சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் நிறைவேறியது.

தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. ஆ. ம. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சட்டம் வந்து பலமுறைத் தடைக்கு முன் வடமராட்சியிலுள்ள சைவப் பெருமக்களையும் ஆலயங்களைத் திறந்துவிடும்படி கோருவது

வீடு கட்ட வசதியற்றிருக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கடன் வசதி செய்துகொடுத்தல்

சிறுபான்மைத் தமிழர் செய்யும் சகல தொழில்களிலும் அரசாங்க உதவி பெற்று முன்னேற்றங்களைப் பெறுவதற்குரிய வழி துறைகளில் ஈடுபடுத்தல்.

தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. ஆ. ம. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள தேநீர்க்கடை, சாப்பாட்டுக்கடைகளை சாதிப் பாகுபாடற்ற முறையில் திறந்துவைத்த பெருமக்களுக்கு நன்றிதெரிவிப்பது.

ஒரு சில வருடங்களுக்காவது சகல கல்வித்துறைகளிலும் சகல உத்தியோகத் துறைகளிலும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு பிரதமரிடம் விசேஷ சலுகை கோருதல்.

கலைப்பட்டம் விஞ்ஞானப் பட்டம் தமிழ் வித்துவான் பட்டம் சங்கீத வித்துவான் பட்டம் ஆகிய பட்டங்கள் பெற்ற சிறுபான்மைத் தமிழர்களுக்கு விசேஷ சலுகை மூலம் நியமனம் கோருதல்.

## தென்னிந்திய கரையோர பகுதிகளையும் பார்வையிடுவர்

யாழ்ப்பாணம், புதன்

கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு இந்திய இலங்கைக் காவல் படையினர் கூட்டு நடவடிக்கை மேற்கொள்வது சம்பந்தமாக இந்திய உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதற்காக விரைவில் இந்தியா செல்லவிருக்கும் உயர் அதிகாரிகளைக் கொண்ட தூதுக்குழு தென்னிந்தியக் கரையோரப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிடவிருக்கிறது.

சென்னை, மதுரை, வேலூர் ஆகிய நகரங்களுக்குச் செல்லவிருக்கும் இக்குழு தொண்டி, வேதாரண்யம், இராமேஸ்வரம் தனுஷ்கோடி முதலிய கரையோரப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிடவிருக்கிறது.

## 'ரெலிவிஷனில்' வண்ணை பெருமாள் கோவில்

யாழ்ப்பாணம், புதன்

லண்டன் பி. பி. ஸி. ரெலிவிஷனில் வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் கோயில் விரைவில் காட்சியளிக்கவிருக்கிறது.

பி. பி. ஸி. ரெலிவிஷன் நிகழ்ச்சிப் பிரிவைச் சேர்ந்த ஒன்பதுபேர் கொண்ட குழுவொன்று 'தீபாவளி'யன்று காலை பெருமாள் கோயிலின் உட்பிரகாரங்களையும் அழகுமிளிரும் மூலஸ்தான விமானத்தையும் படம் பிடித்தது.

பஜனைப் பாடல்களையும் சுலோகங்கள் சிலவற்றையும் இக்குழு ஒலிப்பதிவு செய்தது.

## எல்லையில் பாகிஸ்தான் படைகளைக் குவிக்கிறது

— இந்திராகாந்தி

## இந்தியாதான் பாகிஸ்தானை பயமுறுத்துகிறது

— யாஹ்யாகான்

புதுடில்லி, அக் 19

இந்திய பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் பெருமளவில் படைகளைக் குவித்துவருகிறது என்று இந்தியப் பிரதமர் புதுடில்லியில் தெரிவித்துள்ளார். அதேசமயம் இந்தியாதான் பாகிஸ்தானைப் பயமுறுத்திவருகின்றது என பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகான் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

"பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் யுத்தம் ஒன்று ஏற்படுவதை நாங்கள் விரும்பவில்லை. அப்படியான நிலையொன்று உருவாவதற்கான வழி அமைக்கவும் இந்தியா விரும்பவில்லை. ஆனாலும் இது ஒருபக்கமான விஷயமல்ல" இவ்வாறு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கூறினார். பத்திரிகை நிருபர்களிடம் பேசிய திருமதி காந்தி பாகிஸ்தான் தனது எல்லையில் பெருமளவில் படைகளைக் கொண்டுவந்து குவித்து வருகின்றது எனவே நாங்களும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கிறது என்றார்.

பாகிஸ்தானில் இந்தியாவுக்கு விரோதமான வெறுப்புணர்ச்சி வளர்க்கப்பட்டுவருகின்றது. மதப் போர் ஒன்றுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார். யாஹ்யாகான் இந்தியப் பிரதமருடன் [illegible] திக்க விருப்பம் [illegible] தது பற்றி வினவியபோது எந்தப் பிரச்னைக்கும் தீர்வு ஒன்று ஏற்படுமானால் எவரையும் சந்திக்கத்தயாராய் இருப்பதாக திருமதி காந்தி கூறினார். கிழக்குப் பாகிஸ்தான் விஷயம் பாரத பாகிஸ்தான் பிரச்னை அல்லவென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுடன் பாகிஸ்தான் போர் தொடுக்க விரும்பவில்லையென்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகான் தெரிவித்துள்ளார். பிரஞ்சு பத்திரிகையொன்றுக்கு கொடுத்துள்ள பேட்டியொன்றில் இந்தியாதான் பாகிஸ்தானைப் பயமுறுத்தி [illegible] ளார்.

## புதிய கல்வித்திட்டம் சிறந்தமாணவரை உருவாக்கும்

பதுளை, செவ்வாய்

கல்வித்தரத்தை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் புதிய கல்வித்திட்டத்திற்கு அதிகம் செலவுசெய்கிறது. இப்புதிய கல்வித்திட்டம் நாட்டிற்கு உதவக் கூடிய சிறந்த மாணவர்களை உருவாக்கக்கூடியதாக இருக்கும்.

மகியங்கனை தொகுதியில் புதிய பாடசாலையொன்றை திறந்துவைத்துப் பேசிய மகியங்கனை எம். பி. திரு. எட்வின் விக்ரமரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எட்வின் விக்ரமரத்தின தொடர்ந்து கூறியதாவது: பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் பின்தான் கிராமப்புறங்களில் உள்ள ஏழைப்பிள்ளைகள் உயர் கல்வி பெறமுடிந்தது. அதற்கு முன்னர் பணம் படைத்தோர்களே உயர் கல்வி பெற்றுவந்தார்கள்.

தற்பொழுது கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகள் நகரப்புறங்களில் உள்ள பாடசாலைகள் பெற்றுவந்த சகல வசதிகளையும்பெற்றுவிட்டன.

நாட்டை முன்னேற்றுவதற்கு மக்கள் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கவேண்டும். இல்லாவிடில் நாடு என்றும் முன்னேறாது"

## 1000 பேர் விண்ணப்பம்

கோட்டை, செவ்

விமான ஓட்டிகளாகத் தெரிவு செய்யப்படுவதற்கு 1000 பேர் விண்ணப்பித்துள்ளனர் பதினாலு இடங்கள் மட்டுமே காலியாகவுள்ளன. இந்நாட்டிலிருந்து விமான ஓட்டிகளாக வருவதற்கு மனந்துணிந்து இவ்வளவு விண்ணப்பங்கள் கிடைத்தது இதுவே முதல்தடவை என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், கல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

பட்டுச் சேலைகள் விற்பனவு! தீபாவளியா! திருமணமா!! உங்களுக்கு வேண்டிய பட்டுச்சேலைகள், முதலியனவற்றுக்கு விஜயம் செய்யுங்கள். வசந்தபுரம் சில்க்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

## விற்பனைக்கு

ராஜா தமுக்கி ரஞ்சன் பாலாமணி தாம்பூலப் பிரியர்களுக்கும், பீடாதயாரிப்பாளருக்கும் அத்தியாவசியமானது. வாய்க்கு ருசியையும் தாம்பூலத்திற்குச் சுவையையும் கொடுக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, கொழும்பு, யாழ்ப்பாணம். 3624

சொந்தக்காரரால் மாத்திரம் பாவிக்கப்பட்ட நல்ல ஓட்ட நிலையிலுள்ள சன் பீம் (ரப்பேட்) CN 7927 இலக்க ஸ்போர்ட்ஸ் மொடல் கார். தொடர்பு கொள்க:- நடராச கோட்டம், வல்வெட்டித்துறை. தொலைபேசி- வல்வெட்டித்துறை 26 அல்லது 805. 3676

## விற்பனைக்கு

எங்களுடைய மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப் பெற்ற (M.G.M) குரக்கன் மா, கடலை மா, ஆட்டா மா, உழுந்து மா, கோப்பித்தூள் மஞ்சள் தூள் ஆகியவை பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு:- வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு. முகவரி இரண்டிம் மில்ஸ், 443, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் தொலைபேசி: 611 3675

## தேவை

சலவை செய்வதற்குத் தேவையான 'ஸ்ராச்(Starch) முற்றிலும் கொமிஷன் அடிப்படையில் வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்குப் பெண் விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்:- ஸ்ரான்லி ஹவுஸ் 95/1, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம். 3673

## திருமண அழைப்பு

குமாரசூரியர்—
சிவப்பிரகாசம்

தப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. பி. குமாரசூரியர், திருமதி குமாரசூரியர் அவர்களின் ஏகபுதல்வரும், சன்ஸ்சன்ஸ் ஸ்தாபனத்தின் நிர்வாக இயக்குனருமாகிய திரு. பி. கே. பொன்னம்பலம் அவர்களுக்கும் மட்டுவில் தடுப்புப் பகுதியைச் சேர்ந்த எஸ். எம். சிவப்பிரகாசம் அவர்களின் புதல்வி சரஸ்வதி அவர்களுக்கும் இன்று பிற்பகல் 1 மணிக்கும் 3 மணிக்கும் இடையிலான சுபவேளையில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். 35 A, புங்கன்குளம் ரோட், கொழும்புத்துறை. யாழ்ப்பாணம். 3674

## சர்வாலயதீபத்

## திருத்தம்

இவ்விரோதிகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கத்தில் கார்த்திகை மாதத்தில் 16-ம் திகதி (2-12-71) குறிக்கப்பட்ட சர்வாலய தீபத்தை (வீடுகளில் தீபம்) கார்த்திகை மாதம் 15-ம் திகதி புதன்கிழமை (1-12-71) கைக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு, இ. வெங்கடேசஐயர் வாக்கிய பஞ்சாங்க கணிதர். 3087

## உருளைக்கிழங்கு

மருத்தித்துறை செவ் வடமராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக 600 அந்தர் உருளைக்கிழங்கு ஒல்லாந்து தேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளது.

## உபசபாநாயகர் திரும்பினர்

கோட்டை, செவ். ஆட்சிமன்ற உபசபாநாயகர் ஜனாப் ஐ. ஏ. காதர் லண்டனிலிருந்து திரும்பியுள்ளார். இவர் கடந்த ஒருமாத காலம் லண்டனில் தங்கியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.


ராஜா எம். ஜி. ஆர்.— ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] சோ — அசோகன்
(தினசரி 4 காட்சிகள்) நடித்த

# ஒளிவிளக்கு

ராணி ஜெய்சங்கர் — விஜயலலிதா
(யாழ்ப்பாணம்) நடித்த
தினசரி 4 காட்சிகள்,

# நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த

# காவியத்தலைவி

17-10-71 பி. ப. 6-30 க்கும், 18-10-71 பி. ப. 2-30, 6-30 க்கும் றீகல் தியேட்டரிலும் காண்பிக்கப்படும்.

நாட்களல்ல; வாரங்களல்ல; மாதங்கள் பல தொடர்ச்சியாக......
தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்கள் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டிய சித்திரம்

இப்பொழுது யாழ். மக்களை மகிழ்விக்க தீபாவளி விருந்தாக

லிடோ [யாழ்நகர்]

காலை 10-00 பி. ப. 3-00 மாலை 6-00, இரவு 9-30.

ராஜேஷ்கன்னா
ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார்
மதன்லால்
நடித்த
சக்தி பிலிம்ஸ்
சக்திமங்களர் சித்திரம்



# ஆராதனா

2-வது வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு 4 காட்சிகள்.

# அக்கா தங்கை

* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா
* சுந்தரராஜன் சௌகார் ஜானகி
இன்னும் பலர் நடித்தது.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
மக்கள்
நவீன சந்தையில்
ஓர் கடை
பெறுவதற்கான
விண்ணப்பம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தினால் கட்டப்பட்ட மக்கள் நவீன சந்தையில் கடைகள் வழங்கப்படவிருக்கின்றன. இக்கடைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மாதிரிப் படிவத்தில் அனுப்பப்பட வேண்டும்.

ரூபா 10/-ஐ செலுத்துவதன் பேரில் படிவம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகராட்சிமன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15-10-71. 3086

## பால்மா தட்டுப்பாடு

முல்லைத்தீவு, செவ். முல்லைத்தீவுப் பகுதியில் லக்ஸ்பிறே பால்மா கிடைக்காததால் தாய்மார் கவலை தெரிவிக்கின்றனர்.

லக்ஸ்பிறே விநியோகம் சரிவர நடைபெறவில்லையெனவும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.


றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00,
இரவு 10-00 மணி
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த

## தாலிப் பாக்கியம்

Daily 10-30 only
ESPIONAGE
IN
TANGIERS
(Adults only-Color)

வெல்லிசினிமா
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த

## நிறைகுடம்

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
SHENA DOAH

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
மதுரை வீரன்


கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

### எழுதுகருவி விற்பனையாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள்

### மாணவர் அப்பியாசப் புத்தகங்கள்


அங்கீகரிக்கப்பட்டுள்ள வியாபாரிகள், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்துடன் இக்கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள எழுதுகருவி விற்பனையாளர்கள் மற்றும் புத்தக வியாபாரிகள் ஆகியோர் மூலம் எதிர்வரும் பாடசாலைப் பருவ காலத்தில் போதியளவு அப்பியாசப் புத்தகங்களைக் கட்டுப்பாட்டு விலைகளில் கிடைக்கக்கூடியதாகச் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

புதிய பங்கீட்டு அட்டைகளுக்கு இக்கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பம் செய்யுமாறு எழுதுகருவி விற்பனையாளர்களும் மற்றும் புத்தக விற்பனையாளர்களும் வேண்டப்படுகின்றார்கள். எழுதுகருவி விற்பனையாளர்கள், மற்றும் புத்தக விற்பனையாளர்களும் புதிய பங்கீட்டு அட்டைக்கு விண்ணப்பம் செய்யும் பொழுது தங்களது பதிவு இலக்கத்தைத் தெரிவித்து தபாலுறையின் இடப்பக்கத்தில் "அப்பியாசப் புத்தகங்கள்" எனக்குறிப்பிட்டு 1971 அக்டோபர் மாதம் 31-ந் திகதிக்கு முன்னதாக பொதுமுகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

பொதுமுகாமையாளர்

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2 3084

மனோகரா உதயகுமார், சைலஸ்ரீ
(யாழ்ப்பாணம்) ஜோதிலட்சுமி
தினசரி 4 காட்சிகள் நடித்த

# கள்வனுக்கு கள்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா தலை நகரில்

# சோவியத் பிரதமர் கொஸிஜின் தாக்கப்பட்டார்!

## விருந்தினருக்கு ஏற்பட்ட சங்கடம்பற்றி ட்ரூடோ கவலை

ஒட்டாவ, அக். 19 கனடாவுக்கு விஜயம் செய்துள்ள சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் மீது ஒரு மனிதன் பாய்ந்து தாக்கமுயன்றான். கனடா தலைநகரான ஒட்டாவாவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

சோவியத் பிரதம மந்திரி திரு. அலெக்ஸி கொஸிஜினும், கனடா பிரதம மந்திரி திரு. ட்ரூடோவும் ஆட்சி மன்றக் கட்டிடத்தில் இரண்டு மணிநேரம் ஆலோசனைகள் நடத்திய பின்னர் வெளியில் வந்த பொழுது இந்த மனிதன் பிரதமர்களை நோக்கி பொலிஸ் தடைகளையும் மீறிவிரைந்து சென்று திரு. கொஸிஜினின் கோர்ட்டைப் பிடித்து அவரைக் கீழே தள்ளப்பார்த்தான். ஹங்கேரிய பிரஜையென்று கருதப்படும் இந்த மனிதன் 'ஹங்கேரிக்கு சுதந்திரம் வேண்டும்' என்று கோஷமிட்டான்.

கனேடிய பொலிசார் அவனை உடனே மடக்கிப் பிடித்தார்கள். பின்னர் திரு கொஸிஜினை சுற்றி பாதுகாப்பாக நின்று வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இந்தச்சம்பவம் பற்றிஉடனடியாக விசார நடத்தி அறிவிக்கும்படி கனடா பிரதமர் திரு. ட்ருடோ தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இதற்கு முன்னதாக திரு. கொஸிஜின் செல்ல விருந்த இடங்களில் கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக மூன்று நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்

இந்தச் சம்பவங்கள் கனடாவுக்கு அவமானத்தை உண்டுபண்ணுபவையாகவுள்ளன வென்று கனடா பிரதமர் கவலை தெரிவித்துள்ளார்.

## சீனுவை ஐ. நா. வில் சேர்க்கும் பிரச்னை

### பொதுச்சபையில் விவாதம்

நியுயோர்க், அக். 19 கம்யூனிஸ்ட் சீனுவை ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற பிரேரணை மீதான விவாதம் நேற்று ஆரம்பமாகியது. அல்பேனிய வெளியுறவு அமைச்சர் பிரேரணையைத் தாக்கல் செய்து பேசினர்.

தேசியசீனுவை வெளியேற்றி அந்த இடத்தில் கம்யூனிஸ்ட்சீனுவை அமர்த்த வேண்டுமென்று அல்பேனிய அமைச்சர் வலியுறுத்திப் பேசினர். தாய்வானை வெளியேற்ருத பட்சத்தில் ஐ நா. வில் கம்யூனிஸ்ட்சீனு கலந்துகொள்ள முன்வராது என்ருர் அவர்.

அமெரிக்கப்பிரதிநிதி கம்யூனிஸட் சீனுவை அனுமதிக்க வேண்டுமென்பதை ஆதரித்த போதிலும் தாய்வானை வெளியேற்றுவது மதியற்ற முயற்சி என்ருர். கடந்த 24 ஆண்டுகளில் எந்தவொரு நாடும் ஐ நா. விலிருந்து வெளியேற்றப்படவில்லை யென்று அவர் குறிப்பிட்டார்.

தேசியசீனப்பிரதிநிதிபிரேரணையை எதிர்த்துப் பேசினர். கம்யூனிஸ் சீனுவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகஎண்ணிஏமாற்றமடையவேண்டாம் என்று அங்கத்தவ நாடுகளை அவர் கேட்டுக்கொண்டார் மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் பல வெளிநாட்டு தூதர்களை கம்யூனிஸ்சீனு வெளியேற்றியது பல வெளிநாட்டுப் பிரமுகர்களை அவமானப்படுத்தியது என்று அவர்ஞாபகப்படுத்தினர். அல்பேனிய தீர்மானத்தை நேற்று தாய்வான் பிரதிநிதி மாத்திரமே எதிர்த்துப் பேசினர்.

......

## யுதாண்ட் விரும்பவில்லை

நியுயோர்க், அக். 19 ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்டின் பதவிகாலம் அடுத்த டிசம்பருடன் முடிவடைகின்றது. அதற்கு பின்னர் இடைக்காலத்துக்குக்கூடப் பதவியில் தொடரத் தாம் விரும்பவில்லையென்று அவர் அறிவித்துள்ளார்.

## கிழக்குப் பாகிஸ்தானில் மீண்டும் விமானத்தாக்குதல் ஆரம்பம்

புதுடில்லி. அக். 19 கிழக்குப் பாகிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவத்தினர் மீண்டும் குண்டுவீசித் தாக்கவும் விமானத்தாக்குதல்கள் நடத்தவும் ஆரம்பித்துள்ளார்களாம்.

சில்கட், அரிசிஸ் சட்டக் என்ற நகரில் விடுதலைப் படையினர் பெரும் தாக்குதல்களை நடத்தி பல இடங்களைக் கைப்பற்ற முயற்சி எடுத்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய தாக்குதல் ஆரம்பமாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் படைகளுக்கு வந்த ஆள்சேதங்களை விடுதலை இயக்கத்தினர் ஏற்படுத்தியுள்ளார்களாம்.

சட்டக் ஆற்றில் போய்க் கொண்டிருந்த துருப்புகள் ஏற்றும் மூன்று கப்பல்களையும், மூன்று விசைப்படகுகளையும் விடுதலைப்படையினர் மூழ்கடித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொமில்லா அரங்கில்பாகிஸ்தான் ராணுவம் பெரும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாம் கிழக்கு வங்கத்தை விடுவிப்பதற்காகக் கடைசிவரை விடுதலைப் படையினர் போராடுவார்கள் என்று வங்காளதேசத்தின் புதிய அதிபராக அறிவிக்கப்பட்டுள்ள திரு நஸருல் இஸ்லாம் தெரிவித்துள்ளார். கடைசி வங்காளி உயிருடனிருக்கும்வரை விடுதலைப்போர் தொடர்ந்து நடக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

### பிரிட்டன் மேலும் உதவி

வங்காளதேச அகதிகளின் நிவாரணத்துக்கென பிரிட்டிஷ் அரசாங்கம் மேலும் ரூபா 13 கோடி 50 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது.

......

## இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன் இன்று புதன்கிழமை மாலை இளவாலை நாவலடியில் அமைக்கப்பட்ட கலைமகள் மன்றத்தின் திறப்பு விழாவும் நாவலர் சபையின் ஆரம்ப விழாவும் நடைபெறவுள்ளன யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. நல்லநாதன் தலைமையில் விழா நடைபெறும் முதலியார் செ. முத்துத்தம்பி மண்டபத்தைத்திறந்துவைப்பார். பண்டிதை செல்லத்தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் உரையாற்றுவர். சபானை மின்நாறி நிலையத்தினரின் இன்னிசை நிகழ்ச்சியும் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும்.

## பாம்பிற்கு குழந்தை பலி

சுழிபுரம், செவ்வாய் அக்கராயன் குள குடியேற்றப் பகுதியிலொழும் ஆசிரியர் ஒருவரின் எட்டு மாதம் நிரம்பிய பெண்குழந்தை விஷப்பாம்பினுல் தீண்டப்பட்டு மரணமானது.

......

## வெளிமாணவர் கஷ்டம்

சுழிபுரம், செவ். இவ்வருடம் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழக சிறப்புக் கலைத்தேர்விற்கு துணைப் பாடத்தை மட்டும் இம்முறை தோற்றவிருக்கும் வெளிமாணவருக்கான சிறப்புப் பாடத்துக்கான நேரசூசியே அனுப்பியுள்ளதால், இம்மாணவர் மிகவும்குழப்பமடைந்துள்ளனர்.

பிரவேசச் சீட்டில் துணைப் பாடம் மட்டுமே தோற்றுவதாகக் குறிப்பிட்டிருந்தும், சிறப்புப்பாடத்திற்கான நேரசூசி அனுப்பியதால் சரியான நேரசூசி அனுப்புமாறு தந்திமூலமும் கடிதத் தபால் மூலமும் பேராதனைப் பல்கலைக்கழக காரியதரிசியுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

## நடமாடும் விஞ்ஞானகூட சேவைகள்

கோப்பாய், செவ் கிராமப்பகுதிகளின் நலனை முன்னிட்டு அடுத்தாண்டு ஜனவரியிலிருந்து நாட்டின் சகல பகுதிகளிலும் நடமாடும் நூல்நிலையச் சேவையும் நடமாடும் விஞ்ஞானகூடச் சேவையும் கல்வியமைச்சால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் புதிய சேவைகள் கல்வியமைச்சின் புதிய திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப் படுகின்றன. ஒவ்வொரு மகாவித்தியாலயங்களுக்கும் இந் நூல்நிலையங்களும், விஞ்ஞான கூடங்களும் சென்று மாணவர்க்கு இக் கல்வியின் போதனைகளை [illegible] வழங்கவுள்ளன.

## ஆதீனகர்த்தா கோரிக்கை

மாவிட்டபுரம், செவ். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் திருப்பணி வேலைகளுக்கு நிதிஉதவி செய்யும்படி சைவமக்களை ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்கள் கோரியுள்ளார்.

கோவிலில் ஆலய மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கிழக்கு இரும்புக் கதவிற்கு அருகில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் எழுந்தருளியுள்ளனர்.

ஆலயத்தின் உள்மண்டபங்களை புனரமைக்கும் வேலைகள் தற்சமயம் நடைபெற இருப்பதால் இதற்கு உதவும்படி சைவமக்கள் அனைவரிடமும் ஆலய ஆதீனகர்த்தா கோரியுள்ளார்.

## செக். மறுப்பு

ஆம்ஸ்டர்டாம், அக். 19 வட அயர்லாந்துக்கு செக்கோஸ்லவாக்கியா ஆயுதங்கள் அனுப்பிவருவதாகக் கூறப்படுவதை அந்தநாட்டு அரசாங்கம் மறுத்திருக்கின்றது

சமீபத்தில் ஆம்ஸ்டர்டாமில் பிடிபட்ட ஆயுதங்கள் செக்கோஸ்லவாக்கிய ஆயுதங்களாயிருந்தபோதிலும் அவை அந்த நாட்டிலிருந்து தான் கொண்டுவரப்பட்டவை என்பது பற்றி இன்னும் சரியான ஆதாரம் இல்லையென்றும் கூறப்படுகின்றது.

......

## "மாபெரும் சாதனம்"

ஊரதீவு, செவ்வாய் "வெற்றியையும் தோல்வியையும் ஒரேகண் கொண்டு பார்க்கும் பண்பாட்டை இளைஞர்கள் மத்தியிலே வளர்க்கும் மாபெரும் சாதனம் விளையாட்டுப்போட்டிகளாகும்" என்று ஊரதீவு திருவள்ளுவர் கழகத்தினர் நடத்திய இல்லவிளையாட்டுப்போட்டியின் போது போட்டிக்கு தலைமைவகித்து உரையாற்றிய ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தலைவர் திரு. க. மகேந்திரன் குறிப்பிட்டார். கழகத்தலைவர் திரு க. ஸ்ரீஸ்கந்தராசா வரவேற்புரை நிகழ்த்தினர் ஊரதீவு திறந்தவெளியில் நடைபெற்ற இப்போட்டியில் சங்கிலியன் இல்லம் முதலாமிடத்தையும், எல்லாளன் இரண்டாமிடத்தையும் பெற்றன. இப்போட்டியில் விசேஷ அம்சமாக இடம்பெற்ற வைக்கோல் ஒட்டப்போட்டியில், அடுள் பிரபாகரன் முதலிடம்பெற்ருர் மத்தியஸ்தர்கள் ஓட்டப்போட்டியில் சு. சுந்தரலிங்கமும் பார்வையாளர்கள் ஓட்டப்போட்டியில் க. குகநேசனும் முதலிடம்பெற்றனர் மன்றப்பொதுச்செயலாளர் இராசதுரை பொருளாளர் கா கந்தசாமி, ஆ. கண்ணையா, ந கோபால பிள்ளை, சி சசிகாந்தன் உட்படப்பலர் உரையாற்றினர்.

......

## கிணற்றில்விழுந்த குழந்தையை தாய காப்பாற்றினுர்

மூளாய்த்தீவு, செவ். கிணற்றில் விழுந்த ஐந்து வயது மகனைக் காப்பாற்ற கிணற்றில் துணிவுடன் குதித்தார் ஒரு தாய்.

இச்சம்பவம் மூளாய்த்தீவு வண்ணான் குளத்தில் நடந்தது. தங்கமயில் என்பவருடைய 5 வயதுப் பாலகன் பத்மநாதன் என்பவர் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்ததாகவும் சத்தம் கேட்ட தாயான கோமதி ஓடிச்சென்றுபார்த்ததாகவும் பின்ளை தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருப்பதைக் கண்டு கூக்குரலிட்டும் ஒருவரும் வராததால் துணிவுடன் கிணற்றில் குதித்துப் பாலகனைக்காப்பாற்றியதாகவும் கூறப்படுகின்றது.

......

## வாழைகள் சேதம்

பருத்தித்துறை செவ் கரவெட்டிப்பகுதியிலுள்ள ஆசிரியர் ஒருவருக்குச் சொந்தமான 25 வாழைகள் வெட்டப்பட்டிருக்கக் காணப்பட்டன. இதுபற்றி பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பதவி நீக்குக

பருத்தித்துறை, ஞாயிறு கடந்த மாதம் 30-ம் திகதிக்குப் பின்னர் பருத்தித்துறை கூட்டுறவுச் சங்கத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியரை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்குமாறு கூட்டுறவு ஆணையாளர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று குருபூசை

# மெய்கண்டதேவருக்கு விழா எடுப்போம்

வே. தம்பையா —

செந்தமிழ் அணங்கிற்கு அழகு செய்யும் அணிகலன்களுள் சிவஞானபோதமுமொன்றாகும். சிவஞானபோதம் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் தலையிறந்ததாக விளங்குவதனுல் "மெய்கண்டநூல் சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்" என்று அருணந்திசிவசாரியார் அருளிச் செய்துள்ளார்.

மெய்கண்டதேவர் அருளிச் செய்துள்ள சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது இப்பன்னிரண்டு சூத்திரங்களும் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என நான்கு இயல்களாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சூத்திரம் பற்பல அதிகரணங்களாகவும் ஒவ்வொரு அதிகரணங்களும் பொருள், ஐயப்பாடு, பிறர்பக்கம், சித்தாந்தத் துணிபு, இயைபு என்னும் ஐந்திற்கும் நிலைக்களன்களாகவும் விளங்குகின்றன.

சிவாகமங்களின் நிச்சயப் பொருளை உணர்த்துவதனால் 'சிவஞான போதம்' எனப் பெயர்பெற்ற இந்நூலுக்கு மெய்கண்டதேவரின் முதல் மாணவராகிய அருணந்திசிவாசாரியரின் 'சிவஞானசித்தியார்' வழி நூலாகவும் சித்தாந்தஅட்டகங்களை அருளிச்செய்த உமாபதிசிவாசாரியாருடைய சிவப்பிரகாசம்' சார்பு நூலாகவும் திகழ்கின்றன.

சிவஞானபோதத்தின் வழி நூலாகத் திகழும் சிவஞான சித்தியார் சைவசித்தாந்த நெறியின் உயர்வையும் சிறப்பையும் விளக்குகின்றது. பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும் என்பது சிவஞான சித்தியாரின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இதனாலேயே சிவஞானபோதமும் சிவஞான சித்தியும் சித்தாந்த சைவ நன்னெறியின் உயிரும் உடம்புமெனச் சான்றோர் போற்றுவர்.

பூரணமுத்தியாகிய சிவசாயுச்சியமுத்தியைப் பெறுவதற்கு ஆதாரமாக தோத்திரங்களும் சைவசமய சாத்திரங்களும் விளங்குகின்றன. தோத்திரங்கள் பத்தியையும் சாத்திரங்கள் பதி, பசு, பாச உண்மைகளையும் விளக்குவதனாலேயே இரண்டும் இரு கண்கள் போலவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றும் திகழ்கின்றன.

இத்தகைய சிறப்புப் பொருந்திய சாத்திர நூல்களுள் உச்சிமேல் வைத்துப் போற்றத்தக்கது மெய்கண்டார் தந்த சிவஞானபோதமாகும்.

சிவஞானபோதத்தின் சிறப்பைப்பற்றிக் கூறுவதாயின் பெருகும். எல்லாவகைச் சிறப்பும் பொருந்திய சிவஞானபோதத்தைப் படிப்போர் தொகை மிகக் குறைவு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சிவஞான போத விரிவுரை நடைபெறுவது பாராட்டுக்குரியது. சிறப்புமிக்க சிவஞான போதத்தைத்தந்த மெய்கண்டார் குருபூசைத் தினத்தைச் சைவர்களாகப் பிறந்தோர் அனைவரும் கொண்டாட முன்வர வேண்டும். ஊர்கள்தோறும் மெய்கண்டார் திருவுருவம் நிறுவப்பட வேண்டும். கோவில்களிலே மெய்கண்டதேவரின் திருவுருவம் நிறுவுதல் பொருத்தமானது. சேக்கிழார் பெருமானுக்கு விழா எடுப்பதுபோல் மெய்கண்டதேவருக்கும் ஆண்டு தோறும் விழாவெடுத்தல் இன்றியமையாதது.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

20-10-71 புதன் (செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ அலை 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை. 7-00 விவசாய நிகழ்ச்சி. 7 15 கிராமியப் பாடல்கள். 7-30 மெல்லிசை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை, 6-15 கத்தோலிக்க நிகழ்ச்சி, 6-30 பாட்டு, 7-00 கிராம சஞ்சிகை, 7-15 திருக்குறள் வகுப்பு, 7-30 வாத்திய இசை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை மன்றம், 10-30 செய்தித் தொகுப்பு.

## பெருமளவில் சீனி உற்பத்தியாகும்

கோப்பாய், செவ் கந்தளாய் சீனித்தொழிற்சாலையில் இந்த ஆண்டு பல இடையூறுகளிருந்த போதிலும் 10 ஆயிரம் தொன் சீனி வரையில் தயாரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. மே மாதத்திற்கும் ஆகஸ்ட் மாதத்துக்குமிடையில் 87 ஆயிரம் தொன் கரும்பு கந்தளாயில் அறுவடை செய்யப்பட்டுள்ளது.


# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

ரூபா 1000/- ஜூபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 2000 கொடுக்கப்படும்

ரூபா 500/- ஜூபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 1000 கொடுக்கப்படும்

இடையில் இச்சேமிப்பை எடுத்தால் வருடம் 8 சதவீத வட்டியுடன் கொடுக்கப்படும்

மறுவிபரங்களுக்கு:

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை ... திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.


ஆசிரியருக்கு கடிதம்:

# யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்

யாழ். குடாநாடு வானம் பார்த்த பூமி. இங்குள்ள விவசாயிகள் தங்கள் பயிர்ச் செய்கைக்கு மழையையே நம்பியிருக்கிறார்கள். கடந்த சில மாதங்களாக வரட்சி பயிர்ச்செய்கைக்கு பங்கம் விளைவித்துவருகிறது இதனால் உணவுற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உணவுற்பத்தியை இவ்வருடம் பெருக்கவேண்டும் என்ற அரசின் நோக்கத்துக்கு யாழ் குடாவைப் பொறுத்த அளவில் ஏமாற்றமே கிடைக்கும் கடும் உழைப்பாளியான யாழ் விவசாயிக்கும் இது மனக்கஷ்டத்தை விளைவிக்கும்.

பருவமழை வீழ்ச்சி ஆரம்பமாகும் செப்டம்பர் மாதப் பகுதியிலேயே வழமையாக நெல்விதைக்கும் காலமும் ஆரம்பமாகிறது. இம்மழை இவ்வருடம் காலதாமதமாகிவிட்டது. விவசாயிகள் இந்த மழையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதைவிட ஏற்கனவே நாட்டில் துளிர்த்துள்ள பயிர்களும் இப்பருவ மழையின்மையால் பாதிக்கப்படுவதையிட்டு விவசாயிகள் கவலை கொண்டுள்ளார்கள். நீண்ட நாட்கள் ஏமாற்றிவிட்டு பருவமழை கடுமையாகப் பெய்யுமானால் வெள்ளமேற்பட்டு விதைப்பதற்குக் கஷ்டத்தை யேற்படுத்தி விடும். காலங்கடந்து விதைத்தாலும்மழைப்பருவகாலத்தின் முடிவில் பயிர் நன்றாகச் செழிப்பாக வளருங்காலத்தில் மழைவீழ்ச்சி இருக்காது இதனால் பயிருக்குச் சேதம் ஏற்படுகிறது. இத்தகைய இயற்கைத் தன்மையினால் விவசாயி தான் பயிர்ச்செய்கைக்காக முதலீடு செய்த முதலைக்கூட பெற இயலாமல் கஷ்டமடைகிறான். குடாநாட்டிலுள்ள அநேக விவசாயிகளின் கவலைக்குரிய அனுபவம் இதுவேயாகும். இதன்காரணமாக இவ்விவசாயிகளில் பலர் தாங்கள் வழமையாகப்பயிர் செய்யும் நிலங்களைப் பயிர் செய்யாது விட்டுள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கான நெல்வயல்கள் குடாநாட்டில் ஆண்டுக் கணக்காகத் தரிசுநிலங்களாகியுள்ளன.

தற்போது அரசாங்கம் பயிர்செய்யப்படாது விணுக் கிடக்கும் நிலங்களைச் சுவீகரிக்கப்போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து விவசாயிகள் பெரிதும் பீதியடைந்து தங்களுக்கு ஏற்படப்போகும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாது பயிர்செய்ய முனைகின்றனர் எனினும் இவர்கள் இவ்வட்டபகுதியின் நிச்சயமில்லாத மழைவீழ்ச்சி, கட்டாக்காலிகளாகத்திரியும் மாடு ஆடுகள் ஆகிய இரண்டு பெருங்கஷ்டங்களையும் எதிர்நோக்க வேண்டியவர்களாகவுள்ளனர். மழையை நம்பித் பயிருக்குச் சேதம் விளைவிக்கும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை விவசாயிகளுக்குப் பெரும் மனச்சோர்வை உண்டுபண்ணியுள்ளது. இதுகாரணமாகவும் விவசாயிகள் தங்கள் நிலத்தைப் புறக்கணித்துள்ளனர்.

### கட்டாக்காலிகள் தொல்லை

மழையைப் பொறுத்தவில் அது மனிதனுக்கு இயற்கை அன்னை வழங்கும் ஒரு வரப்பிரசாதம். அதன் தாமதத்தையோ அல்லது இல்லாமையையோ மனிதன் ஒன்றும் செய்யவியலாது. ஆனால் கட்டாக்காலி மிருகங்களின் தொல்லையை மனிதனும் நீக்கலாம், அரசும் கடும் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு தவிர்க்கலாம். இவ்வாறு செய்தால் விவசாயிகள் தாம் நினைத்த நேரத்தில் கிடைக்கும் நீர்வளத்தைக்கொண்டு விவசாயத்தில் ஈடுபடலாம். வருடா வருடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விவசாயிகள் இத்தொல்லைபற்றி புகார் செய்தும் இது கவனியீனமாக விடப்பட்டுள்ளது.

### சுவீகரிப்பு பீதியால்

பயிர் செய்யப்படாத நிலங்களை சுவீகரிக்கப்போவதாக அரசாங்கம் அச்சுறுத்தியதைத் தொடர்ந்து இது வரைகாலமும் கைமொடித்திருந்த விவசாயிகள் மேலும் தங்கள் நிலத்தைக் காப்பாற்றிப் பயனடையலாம் என்ற நோக்குடன் இரும்பவும் கைவிடப்பட்ட தங்கள் வயல்களில் இறங்கவுள்ளனர். ஆனால் இப்பெரும்போக காலநிலையை நோக்குமிடத்து அவர்களின் முதலீட்டைக் கூட பயனடைவர் என்று கூறிவிடமுடியாது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை இம்முறை கடுமையாக இருப்பதால் அது வடகீழ்ப்பருவப்பெயர்ச்சி மழையைத் தாமதமாக்குகிறது. இதனால் வடபகுதி விவசாயிகள் பருவத்தில் பயிர்செய்யவியலாதவர்களாகவுள்ளனர்.

எம். கே.

தலையாளி

# சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் பொதுப்பணி

## உதவி அமைச்சர் பாராட்டு

காலி, செவ் "சென். ஜோன் அம்புலன்ஸ் படை மக்களுக்குப் பெரும் பணியாற்றி வருகின்றது. இம்மாதிரி இயக்கங்கள் நம் மத்தியில் கருணை உணர்வையும், நோயால் துன்புறுவோருக்கு மனமுவந்து பணிபுரியும் மனப்பான்மையையும் ஏற்படுத்துகின்றன" என்று தோட்டத் தொழில் துறை துணை அமைச்சர் திரு. அல்போன்ஸ் காரியவாசம் கூறினார்.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வருடாந்த அணிவகுப்புவிழாவையொட்டி இடம்பெற்ற வைபவமொன்றில் உதவி அமைச்சர் உரைநிகழ்த்தினார். சென்ஜோன் அம்புலன்ஸ் படையின் ஆணையாளர் டாக்டர் மிக்ரோய் போல் அணிவகுப்பை பார்வையிட்டு மரியாதையை ஏற்றுக்கொண்டார். காலி நகர மண்டப முற்றவெளியில் அணிவகுப்பு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சென்ஜோன் அம்புலன்ஸ் படைக்கு அதிக அளவில் அரசாங்கமான்யம் கிடைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய உதவி அமைச்சர் இளம்பிள்ளைகளின் மனதில் சமூகசேவை மனப்பான்மையை இந்நிறுவனம் வளர்த்துவிடுவதின் மூலமும் மாபெரும் சமூகப்பணியை அது செய்கிறது என்றார். இனமத சாதிவேறுபாடின்றி சிறார்கள் ஒரு குடும்பம் போல் இணைந்து சேவைகளில் ஈடுபடுவதைக்கண்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் உதவி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆணையாளர் டாக்டர் மிக்ரோய்போல் பேசுகையில், உண்மையான சேவையில் ஈடுபடுகிறவர்கள் பிரதிபலனை எதிர்பார்க்கமாட்டார்கள் என்றார். நாட்டிலுள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் படை இலைகளில் காலி கிளையே மிகவும் சிறந்த கிளையாக விளங்குகின்றது என்றும் உதவிஅமைச்சர் தெரிவித்தார்.

பொதுநிர்வாகம் உள்ளூராட்சி உள்நாட்டமைச்சின் துணை அமைச்சர் திரு. டபிள்யு நீல் டி அல்விஸ் காலி மேயர் ஜி. பீ. விஜயசேன ஆகியவர்களுடன் மற்றும் பலரும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 1-ம் திகதி புதன்கிழமை (20-10-71)

மேஷம்- உல்லாசமாக பொழுதுபோக்க விரும்புவீர்கள் குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு; கணவன் மனைவி மத்தியில் அன்புமலரும்.

ரிஷபம்-நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம்; புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

மிதுனம்- காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும்; பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும்; தொழில்துறையிலும் வெற்றியுண்டு.

கடகம்- வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடம் உண்டு; புதியமுயற்சிகள் இன்று கைகூடும்; செலவினங்கள் கைகடங்கிறதாக இருக்கும்.

சிம்மம்- உற்சாகமளிக்கும் செய்தியொன்று கிடைக்கலாம்; வியக்கத்தக்க சாதனையொன்று நிலைநாட்டப்படலாம்

கன்னி- குடும்பத்தில் உறவுமுறை திருப்திகரமாக இருக்காது; மூத்தசகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத்தரும்; மட்டமான தினம்.

துலாம்- மனப்போராட்டங்களினால் வேதனைப்படுவீர்கள்; அதிகமுயற்சி எடுத்தாலும் அற்பலாபமே கிடைக்கும்; முன்எச்சரிக்கை வேண்டும்.

விருச்சிகம்- மேடைப்பேச்சாளர்களைப் பெருமைப்படுவர்; உடல் நிலையில் அபிவிருத்தி ஏற்படும்; திருப்திகரமான தினம்.

தனுசு- பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு; வழக்கு விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

மகரம்- அறிவுத்தாகம் மேவிடும்; கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்தப்படும்; வீட்டில் சுபகருமம் இடம் பெறலாம்.

கும்பம்- அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும்; தொழில்துறையிலும் பாராட்டுக்கள் கிடைக்கும்; எல்லாம் இன்பமயம்.

மீனம்- எதிர்கால விடயத்தில் அதிகவிழிப்புடன் இருக்கவும்; தெய்வநம்பிக்கை சிறந்த பயன்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தன்னை வெட்டும் கோடரியிடமும் மறைக்காது தன் நறுமணத்தைத் தரும் சந்தன மரத்தைப் போன்று நாமும் நேர்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். அப்போதுதான் நாம் உலகத்தாரால் போற்றப்படுவோம். —துளசிதாசர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 3-ந் திகதி (20-10-71)

# புகார்களுக்குத் தீர்வு

அரசாங்க ஊழியர்களும் அவர்களுடைய தொழிற் சங்கங்களும் தெரிவிக்கும் புகார்கள் மீது உடனுக்குடன் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென பொது நிர்வாக இலாகாவில் புதிய பகுதியொன்று அமைக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. அரசாங்க ஊழியர்களினது புகார்களை மட்டுமல்லாது அரசாங்க ஊழியர்கள்மீது பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்களையும் இந்தப் பிரிவு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாம். நிர்வாகச் சீர்திருத்தத்தை ஒரு நோக்கில் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த நல்ல திட்டத்தை அரசாங்க ஊழியர்கள் மட்டுமல்லாது பொதுமக்களும் நிச்சயம் வரவேற்பார்களென்று நம்பலாம்.

ஒரு டைரக்டரின் கீழ் இயங்கவிருக்கும் இப் புதிய பிரிவிற்குத்தான் அரசாங்க ஊழியர்கள் தங்கள் புகார்களையும் அப்பீலையும் சமர்ப்பிக்க வேண்டும். தாமே நேரடியாகத் தீர்வு காணக் கூடிய விஷயங்களை டைரக்டர் தீர்த்து வைப்பார். இதர விஷயங்களை பொது நிர்வாக, உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சருடன் கலந்தாலோசனை செய்து தீர்வு காண்பாராம்.

இதர துறைகளிலுள்ளவர்களைவிட அரசாங்க ஊழியர்களுக்குப் பொதுவாகப் பல சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் அவர்களுக்கும் பலவித கஷ்டங்களும் தொல்லைகளும் இல்லாமலில்லை. அரசாங்க இலாகாக்களுக்கிடையே ஒருமுகப்படுத்தப்பட்ட சேவை குறைவாக இருப்பதும் அரசாங்க ஊழியர்கள் பலருக்கும் பலவித தொல்லைகளைக் கொடுக்கக் காரணமாக இருக்கின்றன. அரசாங்க ஊழியர் தமது கஷ்டங்களையும் தொல்லைகளையும் மேலிடத்துக்குப் புகார் செய்தாலும் அவை பற்றிக் கவனித்துத் தீர்வு காண்பதற்குப் பல ஆண்டுகள் கூடச்செல்வதுண்டு. இதற்குள் அந்தப் பிரச்னையே மறைந்துவிடும். புகார் செய்தவர்கள் தமது புகாரையும் மறந்துவிடுவர்.

அரசாங்க அலுவலகம் ஒன்றில் எலிகளின் தொல்லை அதிகம் என்று ஓர் ஊழியர் தமது மேலதிகாரிக்குப் புகார் செய்தாராம். அந்த அதிகாரி தமது மேலதிகாரிக்குத் தெரிவித்தாராம். இப்படியே 'சிவப்புநாடா' என்னும் முறையால் பல இடங்களுக்கும் சென்று பல வருடங்களின் பின் 'எலிகளைக் கொல்லுவதற்கு எலிப்பொறி ஒன்றை வாங்கவும்' என்ற தீர்ப்புடன் திரும்பியபோது அந்த அலுவலகத்தில் தஸ்தாவேஜுகள் எதுவும் உருப்படியாக இருக்கவில்லையாம்.

'சிவப்புநாடா' என்னும் முறையினால் நிர்வாக சேவையில் ஏற்படும் தாமதங்களையும் அதனால் ஏற்படக்கூடிய நிலைகளையும் எடுத்துக் கூறுவதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த 'எலிக்கதை'.

அரசாங்க ஊழியர்களின் சங்கடங்கள் தொல்லைகளை மட்டுமல்லாது அரசாங்க இலாகாக்களுக்கு வருடக்கணக்காக அலைந்து திரிந்தும் தமது அலுவல்களைச் சரியான முறையில் செய்து முடிக்க இயலாது அவதிப்படும் பொதுமக்களுக்கும் பொது நிர்வாக இலாகாவில் அமைக்கப்படவிருக்கும் புதிய பிரிவு நிவாரணம் அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

பொது நிர்வாக உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயக்கா ஆற்றலும் அறிவும் நிறைந்தவர். தமது அமைச்சில் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். புகார்களை விசாரித்து உடனுக்குடன் தகுந்த பரிகாரம் காண்பதற்கு அவர் அமைக்கும் புதிய பிரிவின் வெற்றி மற்றவர்களும் பின்பற்றுவதற்கு வழிகாட்ட உதவ வேண்டும்.

அடுத்த ஆண்டில்

# புதிய தேர்தல் தொகுதி நிர்ணயம்?

கொழும்பு, செவ். ஆட்சிமன்றத் தேர்தலுக்கான தொகுதிநிர்ணயவேலைகள் அடுத்தவருடம் ஆரம்பமாகும் என்று தெரிய வருகிறது. புதிதாக தொகுதிகள் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் இலங்கையின் புதிய ஆட்சிமன்றத்தில் சுமார் 200 அங்கத்தவர்கள் இருப்பார்கள் என்று கருதப்படுகிறது.

சமீபத்தில் நடைபெற்ற மக்கள் கணக்கெடுப்பின்படி நாட்டின் மக்கள்தொகை 12,700,000 ஆக அதிகரித்திருக்கின்றது. அடுத்த தேர்தலின்போது மக்கள்தொகை 13,000,000 ஆக அதிகரித்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 75,000 பேருக்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையிலேயே இப்பொழுது தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. இதன்படி நாட்டின் ஜனத்தொகைக்கு ஏற்றபடி சுமார் 175 ஆசனங்கள் ஆட்சிமன்றத்தில் இருக்கவேண்டும். 1970 ஆண்டு வாக்காளர் தொகை 5,505,028 ஆக இருந்தது. வாக்களிப்பில் 4,672,656 பேர்மட்டுமே கலந்துகொண்டனர்.

மலையகக் கடிதம்

— ஏ. ரி. பொன்னுத்துரை

# கண்டியில் தமிழ்க்கலை மன்றம் உதயம்

கண்டியில் உள்ள பல்வேறு திணைக்களங்களில் தொழில்புரியும் உத்தியோகஸ்தர்கள் தமிழ்க் கலை மன்றம் ஒன்றை சமீபத்தில் ஆரம்பித்துள்ளனர். தமிழ்க் கலையை மலையகத்தில் மட்டும் வளர்ப்பதுடன் நிற்காது, ஈழத்தில் பரவலாக இருக்கும் இலக்கிய கர்த்தாக்களை, கலைஞர்களை காலத்துக்கு காலம் அழைத்து கருத்தரங்குகள் மூலம் ஐக்கியத்தையும் அதேவேளை கலை வளர்ச்சியையும் ஏற்படுத்துவது இம்மன்றத்தின் இலட்சியமென தற்காலிக செயலாளர் கூறினார்.

இம்மன்றத்தின் ஆரம்ப விழாவாக பாரதிவிழா நல்லாயன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த 10-ம் திகதி பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடந்தது. "தமிழ் மகன் மொழிப்பற்று நாட்டுப்பற்று என்பவற்றை முதன்முதல் நன்கு வளர்த்து, அதேவேளை தேசியக் கண்ணோட்டத்துடன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலையில் பணிபுரியத் தயங்கக் கூடாது என பாரதி விரும்பினான்" என்று பேராசிரியர் தலைமையுரையில் கூறினார்.

### எஸ். பொன்னுத்துரைக்கு பதில் சேந்தன்

பேச்சாளர் பட்டியலில் எஸ். பொ.வின் பெயர் முதலில் பொறிக்கப்பட்டிருந்தது. அவரது பேச்சைக் கேட்கும் ஆவலில் அநேகர் மண்டபத்தில் இருந்தமையை என்னால் அவதானிக்க முடிந்தது. கூட்டம் தொடங்க சில நிமிடங்களுக்கு முன் ஒரு பிரபலஸ்தர் "எஸ்-பொ' வரவில்லையாம் கூட்டத்தில் கலகலப்பு" எங்கே இருக்கப்போகிறது என்றார். சுகவீனம் காரணமாக பங்குபற்றாத எஸ். பொ. தனக்குப் பதிலாகப் பேசும்படி அனுப்பிவைத்த சேந்தன் சிரிக்கவும் சிந்திக்கவும் தக்க வகையில் பேசினார். எஸ். பொ.வின் இன்மைத்தொனி இடைக்கிடை பளிச்சிட்டது. புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு என்பதற்கு நகைச்சுவையுடன் விளக்கம் தந்தார் சேந்தன். யாழ்ப்பாணத்து கள்ளின் அடியிலே மண்டி இருக்கும். அதேபோல தமிழகத்தின் புகழும் "மண்டி"க் கிடக்கிறது. அதுதான் போலும் "புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு" என்று அன்றே பாரதி பாடினார் என்றார். ஒரே சிரிப்பு.

### தத்துவ நோக்கில் பாரதி

அரசகரும மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. வ. சிவராசசிங்கம் பி.ஏ. (சிறப்பு) 'தத்துவ நோக்கில் பாரதி' என்ற பொருளில் பேசியதாவது:- தமிழ் கூறும் உலக மகாகவிஞருள் ஒருவராக வைத்து எண்ணத்தக்கவர் பாரதி. அவர் தம் கவிதை என்னும் மந்திரக்கோலால் தொட்டுப் பொன்னாக்காத பொருளில்லை. சமுதாய நோக்கில் அவர் கவிதைகளை மூன்றுபடிநிலையில் வைத்துப்பார்க்கலாம். தமிழன் பெருமை, இன்றைய இழிநிலை, எதிர்கால விடிவு என்ற வகையில் பழமையை நினைவுறுத்தி, இன்றைய இழிநிலையை எடுத்துக்காட்டி, எதிர்கால விடிவைக் கோடிட்டுக் காட்டியுள்ளார் பாரதி.

கண்ணனைச் சகாதேவன் அன்புத் தளையிலிட்டது போன்று பாரதியார் கண்ணனை மனதிலகப்படுத்திப் பல்வேறு கோணங்களில் கண்டுகளித்தார். கீதையிலும் பிறசமய நூல்களிலும் கண்ட தத்துவத்தை உலக வாழ்க்கையோடு இணைத்துக் காட்டினார். வருத்துகுலைப்பதே யோகம்—உயிரோங்க வருந்தியுழைத்தல் யாகம்—போர்செய்ய தேவிடும் போது உளம் பொறுமை பொருந்தல் ஞானம் என்றுணர்த்தியவர். சாத்திரம் வாழ்க்கையோடு இணைந்ததாக வேண்டும். உலக வாழ்க்கையில் அநுஷ்டிக்கப்படாத சித்தாந்தம் இருப்பதும் இல்லாமற் போவதும் ஒன்றுதான். பக்திநெறியில் தமிழ் தெய்வ வழிபாட்டை வேணும் பாரதி மாடன் காடன் போன்ற குறுந்தெய்வ வழிபாட்டைக் கண்டித்தனர். தெய்வம் ஒன்று அது சத்தியம். இதுவே பாரதியார் காட்டும் தத்துவம். இன்னும் பலர் பேசினர்.

### கண்டி தென்னகரும்புர நுண்கலைச் சங்க நடனநிகழ்ச்சிகள்

பாரதிவிழாவின் இறுதி நிகழ்ச்சியாக தென்னகரும்புர நுண்கலைச்சங்க நடன இசை நிகழ்ச்சிகள் ஒரு மணித்தியாலம் வரை நடந்தேறின. நர்த்தனத்தில் பங்கு கொண்ட செல்வி பிரமீளா நடராஜா செல்வி அஜந்தா நடேசன், செல்வி பத்மராணி இராஜசபா என்போரின் எடுப்பான தோற்றமும், முகபாவம், பல்வேறு முத்திரைகளை காட்டும் தகமை தாளக்கட்டுக்கு ஆடும் கூடியபயிற்சி என்பனவும் ரசிகர்களை பெரிதும் கவர்ந்தன. முருகன் வேலின்மேல் ஆணையிட்டதை நிறைவேற்ற எப்போது வருவான் என பக்தை ஏங்கி மயிலிடம் தூது அனுப்புதல், அம்பாள் மீனாட்சியை குழந்தையாகப் பாவனைசெய்து தாலாட்டும் படுதல் என்ற வகையில் அமைந்த பதம் மற்றும் தில்லானா என்பன நடன நிகழ்ச்சியின் சிகரமாய் அமைந்தன.

### கண்டியில் 'களிககாற்று'

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்க கண்டிக் கிளை ஏ. ரி. பி. எழுதிய 'களிக்காற்று' என்ற நாடகத்தை மேடையேற்ற இருக்கிறது. மேற்படி சங்கத்தைச் சேர்ந்த கலைத்துவம் மிக்க ஆசிரியர்கள் நடிக்கின்றனர். இயக்குநராக 'ஏ. ரி. பி.'யும் உதவி இயக்குநராக திரு. யோசெப்பும் கடமையாற்றுகிறார்கள்.

### கல்லூரிகளில் கலைவிழாக்கள்

கலசிலின் முஸ்லிம் மகா வித்தியாலயம், இராஜவலை தமிழ் மகாவித்தியாலயம் என்பன சென்றவாரம் கலைவிழாக்களை நடத்தின. தமிழ் ஆங்கில நிகழ்ச்சிகளுடன் சிங்கள நாடகங்களையும் சிறப்பாக நடித்தனர். சிங்களத்திலும் பேசும் ஆற்றல் மலையக மாணவர்களுக்கு [illegible] விடயம்.

புதிய கல்வித்திட்டம்

# செயல்பட பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம்

யாழ்ப்பாணம்; புதன் பிள்ளைகளின் சேர்வுகால வயது ஆறாக உயர்த்தப்பட்டதால் அதற்கு குறைந்த வயதுப்பிள்ளைகளின் கல்வி வசதிக்காகப் பாலர் பயிற்சிப் பாடசாலையொன்றை அரசாங்கம் இங்கே ஆரம்பித்துநடாத்த வேண்டும்.

கல்லாவி அரசினர் பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர்சங்கக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. இக்கூட்டத்திற்கு தலைமையாசிரியர் திரு. செ. மயில்வாகனம் தலைமை வகித்தார்.

தலைமையுரையில் திரு. செ. மயில்வாகனம் பேசுகையில் கூறியதாவது:

முன்னர் ஒருகாலத்தில் செல்வந்தர்கள் மட்டுமே கல்வி வசதிபெற்றவர்களாக இருந்தார்கள். அரசாங்கத்தின் இலவசக் கல்வித்திட்டம் இந்த நிலையை மாற்றி எல்லாரும் கல்வி பெறக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. இதனால் கல்வியில் பின்தங்கியவர்களும் முன்னேற வழிபிறந்தது.

ஆயினும் நகரப்புறங்களைப்போல நாட்டுப்புறங்கள் கல்வியிற் சகல வசதிகளையும் பெறமுடியவில்லை. இவ்வித்தியாசத்தை நீக்கி கிராமப் புறங்களும், கல்வியின் சகல அம்சங்களையும் அனுபவிக்கக் கூடியதாக புதிய தேசிய கல்வித்திட்டத்தை அரசாங்கம் இன்றுகொண்டு வருகின்றது. இக் கல்வித்திட்டம் சிறந்த முறையில் செயல்படவும், அதன் உயர்ந்த பலன்களை சிறுவர்கள் அனுபவிக்கவும் பெற்றோர் ஆசிரியர்களுடனும் அரசாங்கத்துடனும் ஒத்துழைக்க வேண்டும்."

கீழ்க்காணும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இப்பாடசாலையில் கணிதம், விஞ்ஞானம் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியரை அரசாங்கம் நியமிக்கவேண்டும்,

1972-ம் ஆண்டு இப்பாடசாலையில் 9-ம் வகுப்பு நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

நாளை திறப்புவிழா
ரகுநாதன் பதிப்பகம்
(யாழ்ப்பாணக் கிளை)
302, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org